அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI
Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624



அ.எண் :167 /2017
தேதி :29.12.2017

**ராணிபேட்டையில் பழுதடைந்த இயந்திரத்தால் ஏற்பட்ட விபத்தில் தொழிலாளர்கள் 3 பேர் பலி**

**அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் நிறுவனத்தலைவர் ஆர்.சரத்குமார் இரங்கல்**

வேலூர் மாவட்டம், ராணிபேட்டை அடுத்து சிப்காட்டில் உள்ள தனியார் தோல் தொழிற்சாலையில் பழுதடைந்த இயந்திரத்தால், சுமார் 1 டன் எடையுள்ள இரும்பு அறுந்து விழுந்து ஏற்பட்ட விபத்தில், ஜெயசங்கர் அவரது மகன் அருண் மற்றும் ராஜேந்திரன் ஆகிய மூவரும் உயிரிழந்த செய்தி கேட்டு வேதனையடைந்தேன்.

உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கும், உற்றார் உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் என் சார்பிலும், அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் சார்பிலும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், தொழிற்சாலைகள் இயந்திரங்களை அவ்வப்போது கண்காணித்து அதில் ஏற்படும் பழுதுகளை உடனே சரிசெய்யவேண்டும். அரசு வலியுறுத்தும் விதிகளை நடைமுறை படுத்துவதோடுமட்டுமல்லாமல், அந்தந்த தொழிற்சாலைகளும், தொழிற்சாலைகளில் பணிபுரியும் பணியாளர்களுக்கு ஏற்றாற்போல் அவர்களுக்கு தகுந்த பாதுகாப்பு வசதிகளை கண்டிப்பாக செய்துதருவது தொழிற்சாலைகளின் பொறுப்பும் ஆகும்.

**ஆர்.சரத்குமார்**
நிறுவனத் தலைவர்

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com